## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல்கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2019 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து சபையின் 2019 திசெம்பா் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசாா் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---------------------------------------------------------------------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

------------------------

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

---------------------------------------------------------------------------

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான

நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிதியத்திற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம், மதிப்பீட்டிலான திருத்தமாக சீராக்கம் செய்யப்பட வேண்டிய சபையின் வாகனங்கள் மற்றும் வளிச்சீராக்கி இயந்திரங்களுக்கான பெறுமானத் தேய்வு ஒதுக்கீட்டு சதவீதம் 20 சதவீதத்திலிருந்து 12.5 சதவீதமாக குறைக்கப்பட்டமை 2017 ஆம் ஆண்டில் பின்னோக்கி சீராக்கம் செய்யப்பட்டமையால் நடைமுறையல்லா சொத்துக்களின் பெறுமதி ரூபா 14,111,960 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | வாகனங்கள் மற்றும் வளிச்சீராக்கி இயந்திரங்களுக்கான பெறுமானத் தேய்வு ஒதுக்கீட்டு சதவீதம் பின்னோக்கி சீராக்கம் செய்யப்பட்டமையால் ஏற்பட்ட வேறுபாட்டினை சீராக்கம் செய்வதற்கு உரிய பேரேட்டுப் பதிவுகளை இடுவதற்கு குறித்து வைத்துக்கொள்கின்றேன். | நடைமுறையல்லா சொத்துக்களின் பயன்பாட்டு ஆயுட்காலத்தை அடிப்படையாக கொண்டு அந்த சொத்துக்களை பெறுமானத் தேய்விடுவதற்கும், சொத்துக்களின் கொண்டு செல்லும் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 507(2) மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.5 ஆம் பிரிவு | வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளாது சபையினால் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 41,179,616 ஆக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | வருடாந்த பொருள் மெய்மையாய்விற்குரிய அனைத்து பணிகளும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், நாட்டினுள் ஏற்பட்ட அவசர நிலை காரணமாக அதனை நிறைவு செய்ய முடியவில்லை. எவ்வாறெனினும், எஞ்சிய பணிகளை நிறைவு செய்து யூலை மாதமளவில் அறிக்கை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கின்றேன். | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 507(2) மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.5 ஆம் பிரிவின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | பிராகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவு | கணக்காண்டு நிறைவடைந்து 150 நாட்களின் பின்னர் சபையின் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2018 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை 2020 யூன் 22 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்க-வில்லை | 2018 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையின் அனைத்து தகவல்களும் சேகரிக்கப்பட்டு மென் பிரதிகள் தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், அச்சிடுவதற்குரிய பணிகள் இடம்பெறுகின்றது. | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிராகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு விளைவு ரூபா 6,433,653 ஆன மிகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 10,139,790 ஆகும். அதற்கமைய மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 3,706,137 ஆன குறைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த குறைவிற்கு 2019 ஆம் ஆண்டின் போது ஆசிய பசுபிக் தராதர அங்கீகார ஒத்துழைப்புக்கான குழாமினை மதிப்பீடு செய்வதற்காக (APAC Peer Evaluation) ரூபா 3,286,128 தொகை அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவினம விடங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

சபையின் தராதர அங்கீகார வருமானம் ரூபா 2,367,943 இனால் அதிகரித்துள்ளதுடன், தனிப்பட்ட ஆளனி சம்பள செலவினம் ரூபா 3,717,404 இனால் அதிகரித்திருந்தது. போக்குவரத்து செலவினங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் கடந்த ஆண்டுகளுக்கு ஒப்பாக நடப்பாண்டின் போது ரூபா 1,158,267 இனால் குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் சிரேஷ்ட மட்டத்திலான 02 பதவிகள், மூன்றாம் நிலையிலான 02 பதவிகள் மற்றும் இரண்டாம் மட்டத்திலான 01 பதவியும் 2020 யூன் 22 ஆந் திகதியளவில் வெற்றிடமாக காணப்பட்டமை | தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு நடைமுறைக்காக உள்ளடக்கப்பட வேண்டிய மாற்றங்களை உள்ளடக்கி இலங்கை தராதர அங்கீகாரச் சபைக்கான புதிய ஆட்சேர்ப்பு | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது. |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டதுடன், வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடைமுறை தற்போது தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்குறிப்பிடப்பட்ட வெற்றிடமான பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளதுடன், இதற்காக விசேட அங்கீகாரத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல்கள் ஆணையாளரிடமும் விசேட கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த அவசர ஆட்சேர்ப்புகளின் தேவைப்பாட்டினை புரிந்துகொண்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் துரிதமாக ஆட்சேர்ப்பு நடைமுறையில் தேவையான திருத்தங்களை மேற்கொண்டு, இந்த பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கு அங்கீகாரம் வழங்குவதாக உடன்பட்டுள்ளது. அதனால் அந்த தேவைப்பாட்டினை பூர்த்திசெய்தவுடன் இந்த பதவிகளுக்குரிய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். | |
| (ஆ) | மேலதிக பணிப்பாளர் பதவி பதவியணி நடைமுறை அங்கீகரிக்கப்பட்ட திகதி முதல் வெற்றிடமாக காணப்படுவதுடன், ஆட்சேர்ப்பதற்காக 2012 ஆம் ஆண்டு முதல் நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டிருந்த | மேலதிக பணிப்பாளர் பதவி தற்போது ஒப்பந்த அடிப்படையில் காணப்படுகின்றது. அந்த பதவியை மீள முழு நேரக் பதவியொன்றாக மாற்றுவதற்காக தற்போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் கலந்துரையாடல் | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது. |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும், அந்த பதவிக்கு ஆட்சேர்த்தல் இடம்பெற்றிருக்கவில்லை. சீஎம்எஸ்/1601 ஆம் இலக்க மற்றும் 2014 ஒக்தோபர் 14 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்தின் பிரகாரம், ஒவ்வொரு வருடமும் ஒப்பந்தக் காலத்தினை நீடிப்பு செய்யும் அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள போது, அதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் இதற்காக வழங்கப்படும் தீர்மானத்தின் அடிப்படையில் மேற்படி நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக தாழ்மையுடன் தெரிவிக்கின்றேன். | |
| (இ) | சபையினால் ஒத்தியல்பு மதிப்பீட்டு பணிகளில் ஈடுபடுத்துவதற்கு நிறைவேற்றுத் தரத்தின் கீழான தரங்களில் ஆட்சேர்ப்பதற்கான பதவிகளை உருவாக்குவதற்கு தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், இதன் காரணமாக நிறுவனத்தின் மேம்படுத்த இயலாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஒத்தியல்பு பணிகளை தற்போது மேற்கொள்வது உதவி பணிப்பாளர் (அங்கீகாரம்) மற்றும் பிரதிப் பணிப்பாளர் (அங்கீகாரம்) ஆகிய இரு பதவிகள் மூலம் ஆகும். மேலும், குறித்த அங்கீகார பணிகளுக்காக தகைமைபெற்ற வெளிவாரி மதிப்பீட்டாளர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். நிறைவேற்றுத் தரத்திற்கு கீழான பதவிகளை கருத்திற்கொள்ளும் போது தராதர அங்கீகார விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள தேவையான ஆவணங்களை பூரணப்படுத்தல், கொடுப்பனவுகளுக்காக பட்டியல்களை தயாரித்தலானது அதற்காக விசேட பயிற்சி பெற்ற முகாமைத்துவ உதவியாளர் ஒருவரினாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. | சபையின் பணிகளை விஸ்தரிப்பதற்கு மற்றும் நிறைவேற்றுத் தரத்திலான வெற்றிடங்களை நிரப்புவதற்கு தராதர அங்கீகார நடைமுறையில் நேரடியாக தொடர்புறும் இரண்டாம் மட்ட குழுவொன்று காணப்படல் வேண்டும். |